**DVC. NO. 1/2022** தேதி**: 11.02 .2026**

**<u>மசா 1 திருமதி. வைஷ்ணவி க/பெ கார்த்திக் நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர் மனுதாரர் 1–6 தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**1.** எனக்கும் 1ம் எதிர் மனுதாரருக்கும் திருமணம் நடந்த தேதி 20.02.2020. திருமணம் முடிந்து 1ம்எதிர் மனுதாரர் வீட்டில் 20 நாட்கள் தான் இருந்தேன் என்றால் இல்லை சுமார் 6 மாதங்கள் இருந்தேன். திருமணம் சமயத்தில் எனக்கு எனது வீட்டில் 28 1/2 பவுன் நகைபோடப்பட்டது என்றாலும், மாப்பிள்ளைக்கு 4 பவுன் நகை போடப்பட்டது என்றாலும் மொத்தம் 32 1/2 பவுன் என்றால் சரியல்ல. 75 பவுன் போட்டார்கள். அவ்வாறு 75 பவுன் நகை போட்டதற்காக நான் ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மசாஆ 8,மசாஆ 9 தான் அந்த ரசீதுகள் என்றால் அவை மாப்பிள்ளைக்கு போடப்பட்ட 84 கிராம் நகைகள். நான் எனக்கு போடப்பட்டதாக 75 பவுன் நகைக்கான ரசீதுகள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரசீதுகள் இல்லை. அவைகள் எங்கள் வீட்டின் பாரம்பரிய நகைகள். நான் எனது மனுவிலும் நிருபண வாக்குமூலத்திலும் அந்த நகைகள் பாரம்பரிய நகைகள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரிலும் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன். சாட்சியிடம் வழக்கறிஞர் மீண்டும் கேட்டபோது சாட்சி அவ்வாறு கூறவில்லை என்று சொன்னார். சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த HMOP 3/2022 ல் குறுக்கு விசாரணையின் போது 75 பவுன் நகைகள் காண ரசீதுகளை நான் DVC 01/2022 ல் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. நான் எதிர் மனுதாரரிடம் எனது பொருள்கள் , என்னென்ன மீதமுள்ளது என்பது குறித்து தான் சாட்சியம் அளித்துள்ளேன். மசாஆ 8, மசாஆ 9 ஆவணத்தில்வளையல், செயின் போன்றவை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அவை மாப்பிள்ளைக்கு போடப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. வளையல் என்று நான் குறிப்பிட்டது ஆண்கள் அணியும் காப்பு ஆகும். மசாஆ9 இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 75 பவுன் நகை எனது வீட்டில் போடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 32 1/2 பவுன் நகைகள் தான் போடப்பட்டன என்றாலும், அந்த நகைகள் எனது பெற்றோரால் எனது திருமணத்திற்கு விரும்பி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1–6 எதிர் மனுதாரர்கள் வரதட்சணையாக நகை , பொருள்கள் என்னிடம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எழுத்தறிவுநாதன், தனலெட்சுமி ஆகியோர்களின் தூண்டுதலின் பேரில் தான் நகை , பொருள்கள் என்னிடம்

கேட்டார்கள். நாத்தனார் காயத்ரி வயல் வாங்க வேண்டும் என்பதற்காக பணம் , நகை வேண்டுமென கேட்டார்கள்.

3.எழுத்தறிவுநாதன் என்பவர் சென்னையில் பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். சனி , ஞாயிற்றுகிழமைகளில் இங்கு வருவார். 6ம் எதிர் மனுதாரர் தனலெட்சுமிக்கு வயது 80 என்றாலும் , அவர் திருச்சி அருகில் லால்குடியில் வசித்து வருகிறார் எனறால் சரிதான். அவர் வயல் வேலைகளை முடித்துவிட்டு எனது வீட்டிற்கு தான் வருவார். 4 ம் எதிர் மனுதாரர் காயத்ரி திருமணம் ஆகி மன்னார்குடி, வடுவூர் , சீனிக்குடிக்காட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் திருமணமாகி சிறிது நாட்கள் அங்கு இருந்தார். அவர் எப்போதாவது தான் அவர் வீட்டிற்கு செல்வார். திருமண சமயத்தில் அவர் வெளிநாட்டில் இருந்தார். 1 ம் எதிர் மனுதாரர் சென்னை கிண்டியில் ரேசன் கடையில் வேலை செய்து வருகிறார் என்றால் சென்னை ஆவடியில் வேலை செய்து வருகிறார். 1–6 எதிர் மனுதாரர் வெவ்வேறு இடத்தில் வசித்து வருகிறார்கள் என்றாலும் நான் சொல்வது போல் அவர்கள் என்னை குடும்ப வன்கொடுமை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனுவிலும், நிருபண வாக்குமூலத்திலும் எனக்கு குடும்ப வன்கொடுமை எந்த தேதி, மாதம், வருடம் நடந்தது என குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் எனக்கு தேதி, மாதம் ஞாபகத்தில் இல்லை.

4. அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் என்னால் தேதி, மாதம், நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை எனறால் சரியல்ல. 13.07.2020 ம் தேதி நான் 1ம் எதிர் மனுதாரான எனது கணவர் மீது அனைத்து மகளிர் காவல்நிலையம் திருவையாறு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது காவல்நிலையத்தில் இரு தரப்பு பெரியோர்கள் முன்னிலையில் பேசி முடிக்கப்பட்டு 1ம் எதிர் மனுதாரர் என்னிடம் 32 1/2 (258.750கிராம்) நகைகள் , கார், உடைகள், புத்தகம், கார் சாவி (2) ஒப்படைக்கப்பட்டதாக எழுதி கொடுக்கப்பட்டது என்றாலும், அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான் . **அந்த ஆவணம் எதிர் மனுதாரர் தரப்பில் எமசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த நகைகளை ஏன் காவல்நிலையத்தில் எழுதி வாங்கி பெற்றுகொண்டேன் என்றால் அப்போது எனக்கு தேர்வு நடந்து வந்ததால் புத்தகம்வாங்கினேன், நகைகளை தற்காலிக திருமண பயன்பாட்டிற்காக வாங்கினேன். அந்த ஆவணத்தில் அவ்வாறு தற்காலிக பயன்பாடு என எழுதவில்லை என்றால் நான் காவல்நிலையத்தில் தற்காலிக பயன்பாட்டிற்கு தான் வாங்கியதாக எழுதி கொடுத்தேன். அந்த ஆவணத்தில் திருமணத்திற்காக பெற்றுகொள்வதாக சொல்லவில்லை என்றால் நான் காவல்நிலையத்தில் அவ்வாறு தான் எழுதி கொடுத்தேன்.

5. திருமண நிகழ்விற்காகவும், தற்காலிக பயன்பாட்டிற்காகவும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவ்வாறு பெற்று கொள்ளவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றாலும், நான் எதிர் மனுதாரர்களை பழி வாங்க வேண்டும் என்பதற்காக தான் அவ்வாறு செய்தேன் என்றால் சரியல்ல. நான் திருவையாறு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில புகார்கொடுத்து நகை, பொருள்கள் பெற்று கொண்டதால் தான் 1ம் எதிர் மனுதாரர் சார்பு நீதிமன்றத்தில் விவகாரத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரரின் தாய்மாமாவின் வற்புறுத்தலால் தான் அவர் வழக்கு தாக்கல் செய்தார். மசாஆ 2 ஆவணம் எனக்கு கர்ப்பம் கலைந்தது தொடர்பாக நான் எடுத்துகொண்ட சிகிச்சைக்கான ஆவணம் என்றால் சரிதான். நான் தஞ்சை our lady மருத்துவமனையில் 25.03.2020 ம் தேதி அனுமதிக்கபட்டேன் என்றால் சரிதான்.

6. நான் பவனமங்கலத்திலுள்ள எனத வீட்டில் இருந்து எவ்வாறு தஞ்சை மருத்துவமனைக்குசேர்ந்தேன் என்றால் எனது கணவர் என்னை எனது வீட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு எனக்கு வயிற்று வலி இருந்ததால் தஞ்சை our lady மருத்துவமனையில் சேர்ந்தேன். எனது கணவர் வீட்டில் எனக்கு பப்பாளிபழசாறு தந்தார்கள். அதன்பிறகு தான் எனது கணவர் என்னை எனது வீட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார். மேற்படி சம்பவம் நடந்த தேதி , நேரம் போன்றவற்றை குறிப்பிட்டு புகார் வாக்குமூலத்திலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்த மசாஆ 2 ஆவணத்தில் எனது கருப்பபை வீக்கம் இருந்ததால் ஏற்பட்ட கருகலைப்பை பயன்படுத்தி பப்பாளி பழசாறால் கரு கலைந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சேர்ந்தபோது மருத்துவரிடம் பப்பாளிசாறு அருந்திருந்தேன் என்பது குறித்து மசாஆ 2 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் நான் மருத்துவரிடம் வாய்மொழியாக சொன்னேன். நான் மருத்துவரிடம் உண்மையில் அவ்வாறு சொல்லிருந்தால் அது குறித்து மசாஆ2 ஆவணத்தில் சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

7. எனக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்னரே 1ம் எதிர் மனுதாரின் தந்தை சாலை விபத்தில் இறந்துவிட்டார் என்பது தெரிந்து தான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் அவர் இறந்தது குறித்து தெரியும். ஆனால் காரணம் தெரியாது. அவர் பணியில் இருக்கும்போதே இறந்ததால் தான் கருணை அடிப்படையில் அவரின் வேலையை 1ம் எதிர் மனுதாரர் செய்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிர் மனுதாரர் தந்தை இறந்த போது 1ம் எதிர் மனுதாரருக்கு இரண்டு தங்கைகள் திருமணம் ஆகாமல் இருநதார்கள் என்றால்

3ம் எதிர் மனுதாரர் கூறி எனக்கு தெரியும். தந்தையின் வேலை செய்து வரும் 1ம் எதிர் மனுதாரர் தனது தங்கைகளையும், தாயரையும் பராமரிக்கும் கடமை உள்ளது என தெரிந்து தான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்பே 1ம் நாத்தனாரின் திருமணம் முடிந்துவிட்டது. எனது முதல் நாத்தனரின் திருமணத்தை 1ம் எதிர் மனுதாரர் தான் அவரது தந்தை இறப்பிற்கு பிறகு முன் நின்று நடத்தி வைத்தார் என்றால் சரிதான். அவரது பூர்விக இரண்டு ஏக்கர் இடத்தை விற்று நடத்தி வைத்ததாக 3ம் எதிர் மனுதாரர் கூறினார். எனக்கும் சென்னையில் வேலை வாங்கி தருவதாக கூறிதான் திருமணம் பேசினார்கள்.

8. 1ம் எதிர் மனுதாரருக்கு கும்பகோணத்தில் சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். எனது மாமியார் அந்த வீட்டில் வசித்து வருகிறார் என்றால் தனியாக வசித்து வருகிறார். கும்பகோணத்தில் 1ம் எதிர் மனுதாரருக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றாலும், அதனை விற்று விட்டு சென்னைக்கு சென்றுவிடலாம் என்று 1ம் எதிர் மனுதாரர் ஒருபோதும் சொன்னதில்லை என்றால் சரியல்ல. நான் தான் 1ம் எதிர் மனுதாரரை அவரது தாயார், சகோதரிகளிடமிருந்து பிரித்து தனி குடுத்தனம் சென்னைக்கு செல்ல அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்து நகைகள் வாங்கி சென்றேன் என்றால் சரியல்ல. அவர்கள் தான் வாழவிடவில்லை. எனது எண்ணம் நிறைவேறாததால் தான் நான் குடும்ப வன்கொடுமை மனுதாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மசாஆ 3 (09.04.2021 )ஆவணமானது நான் திருச்சி ப்ரண்ட்லைன் மருத்துவமனையில் தற்கொலை முயற்சி செய்யததால் அனுமதிக்கப்பட்டதை காட்டகூடிய ஆவணம் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்களின் நான் தற்கொலை முயற்சி செய்தேன் . நான் திருமணம் முடிந்து 15 நாட்கள் தான் எனது கணவர் வீட்டில் வாழ்ந்தேன் என்றால் சரியல்ல. எனது தாயார் வீட்டில் 6 வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

9. எனக்கு யாருடைய தூண்டுதலும் தேவை படாது என்றால் சரியல்ல. மசாஆ 3 மருத்துவ குறிப்பேட்டில் நான் தூண்டுதலால் தற்கொலை முயற்சி செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான் . நான் திருச்சி ப்ரண்ட்லைன் மருத்துவமனைக்கு சேர்வதற்கு முன்பாக திருக்காட்டுப்பள்ளி ப்ரண்ட்லைன் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துகொண்டேன் என்றாலும் அது குறித்து மசாஆ 3 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருக்காட்டுப்பள்ளி ப்ரண்ட்லைன் மருத்துவமனையில் எனக்கு கொடுக்கப்பட்ட முதலுதவி சிகிச்சைக்காக ஆவணம் எதுவும் மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருச்சி ப்ரண்ட்லைன் மருத்துவமனையில் சேர்ந்தபோது மருத்துவரிடம் தைராக்சின் மாத்திரை –10, பராசிட்மல்–2 மாத்திரை சாப்பிட்டதாக

கூறினேன் என்றால் சரிதான். மசாஆ 3 ஆவணத்தில் நான் மருத்துவமனைக்கு சேர்ந்தபோது சுயநினைவில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தைராக்சின் மாத்திரை என்பது தைராய்டு பாதிக்கப்பட்டவர் உட்கொள்ளும் மாத்திரை என்றால் சரிதான். அந்த மாத்திரை எனது அத்தை மகள் சாப்பிட்டு வருகிறாள்.

10. இது குறித்து நான் எனது புகாரிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விவகாரத்து மனுவில் சொல்லியுள்ளேன். எனது விவகாரத்து மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தைராய்டு உள்ளது என்றாலும், கர்பப்பை வீக்கம் உள்ளது என்றாலும் அதனால் தான் எனது கரு கலைந்து விட்டது என்றால் சரியல்ல. நான் பொய்யாக எதிர் மனுதாரர்கள் ஊசி போட்டதாகவும், பப்பாளி சாறு கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் ஆரம்பத்திலிருந்தே தனது தாயார் மற்றும் சகோதரிகளை விட்டு விட்டு சென்னையில் தனிகுடித்தனம் செய்ய மறுத்து விட்டதால் அவர்களை பழி வாங்கவேண்டு என்பதற்காக நான் பொய்யான சங்கதிகளை மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் திருவையாறு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து நகைகள் பெற்றுகொண்டதை எனது புகாரிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 21.04.2021 ம் தேதி திருக்காட்டுபள்ளி காவல்நிலையத்தில் எதிர் மனுதாரர்கள் 6 பேர் மீதும் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

11. அந்த புகாரின் மீது உண்மை தன்மை இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், நான் தனிபுகாராக திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CRLMP No 1750/2021 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எனது மனுவினை பரிசீலனை செய்து கடந்த 17.05.2021 ல் தள்ளுபடி செய்தார் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் வீட்டில் சொன்னதால் தான் வழக்கிற்கு செல்லவில்லை அந்த வழக்கு தள்ளுபடி ஆனது. அந்த CRLMP No 1750/2021 இணையத்தில பதிவிறக்கம் செய்யப்பட்டது, அதன் சான்றிட்ட நகல் **ஆவணம் எதிர் மனுதாரர் தரப்பில் எமசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி மனுகுறித்த எந்த விவரத்தையும் இந்த மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த மனு தள்ளுபடி செய்யபட்ட விவரம் குறித்து இந்த குடும்ப வன்கொடுமை மனுவில் சொல்லாமல் மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் 1ம் எதிர் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தாரை நீதிமன்றத்திலும், திருவையாறு அனைத்து மகளிர் காவல்நிலையத்திலும் , திருக்காட்டுப்பள்ளி காவல்நிலையத்திலும் , பின்பு தனிபுகார் கொடுத்தும் கொடுமை செய்தேன்

என்றால் சரியல்ல. 1–6 எதிர் மனுதாரர்களுக்ககு எதிராக புகார் கொடுத்து நகைகள் , உடைமைகள், கார், உடைகள் எழுதி வாங்கி கொடுமை படுத்தினேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் மட்டும் தான் காவல்நிலையம் வந்தார். வேறு யாரும் அவர் தரப்பில் வரவில்லை.

12. நான் தாக்கல் செய்த மசாஆ 2,மசாஆ3 ஆவணங்கள் என் உடலில் உள்ள குறைபாடுகளால் என் கரு கலைந்து என்றாலும், அதற்கு எதிர் மனுதாரர்கள் காரணமில்லை என்று சொன்னால் சரியல்ல. மசாஆ 4 ஆவணத்தில் எனக்கு எதிர் மனுதாரர்கள் கட்டாயபடுத்தி ஊசி போட்டார்கள் பின்னர் எனது தகப்பனார் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. எழுத்தறிவு நாதன் என்னை ஊசி போட்டு மயக்கநிலையில் என்னுடைய தகப்பனார் வீட்டில் விட்டு சென்றார் என்று தான் சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தில் மருத்துவர் எனக்கு ஒன்றுமில்லை ஒரு அதிர்ச்சி போல் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எழுத்தறிவு நாதன் எனக்கு ஊசி போட்டார் அதனால் மயக்கம் அடைந்தேன் என்று மனுவிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . நான் தான் எதிர் மனுதாரர் குடும்பத்தை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் எதிர் மனுதாரர் மற்றும் அவர் குடும்பத்தை பொய் புகார் கொடுத்து அலைகழிப்பு செய்துவிட்டு நகைகள் அனைத்தையும் பெற்று கொண்டதாலும், உங்களுக்கு ஜீவனாம்சம் கேட்க எந்த தகுதியும் இல்லை என்றால் சரியல்ல.

13. நான் மனுவில் சொல்லியுள்ளது போலல் 75 பவுன் நகைபோடவில்லை என்று சொன்னால்சரியல்ல. அதே போல் 150 பவுன் கேட்டு வரதட்சனை கொடுமை செய்யததாக உண்மை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் Ph.d படித்து உயர் கல்வி தகுதி இருப்பதாலும் , வேலை வாய்ப்பு பெற முடியும் என்பதாலும், ஜீவனாம்சம் கேட்க தகுதியில்லை என்றால் சரியல்ல. தற்போது Ph.d படித்து கொண்டு தான் இருக்கிறேன். படித்து முடிக்கவில்லை. எனது மனுவில் ரூ. 95,00,000/– செலவு செய்து எனது பெற்றோர் திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொல்லியுள்ளதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 5 ல் compromise effected என்று கண்டுள்ளது என்றால் சரிதான். என்னை அழைத்து சென்று வாழ்வதாக கூறினார்கள். நான் நீதிமன்றத்தில் பல உண்மைகளை மறைத்து எதிர் மனுதாரர்கள் மீது நிவாரணங்கள் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் சொல்லியுள்ளவாறு எதிர் மனுதாரர்கள் எந்த குடும்ப வன்கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்– S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.